டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.02.2025 புதன்கிழமை | பக்கங்கள் 20 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 194 - Madurai | Online Edition

# வறண்ட வானிலையே தொடரும்!

சென்னை, பிப்.11

தமிழகத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு மழைக்கான வாய்ப்பு இல்லை என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இன்றும், நாளையும் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். காலையில் பொது வாக லேசான பனிமூட்டம் காணப்படும். 14ம் தேதி முதல் 17ம் தேதி வரையிலான நாட்களில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில்நுட்ப வணிக சந்திப்பு' 2025

கோயம்புத்தூர், பிப்.11

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், உயிர் தொழில்நுட்ப சிறப்பு மையம் (COXBIT) சார்பில் அக்ரி-டெக் ஸ்டார்ட்-அப் தொழில் சந்திப்பு 2025 பிப்ரவரி 8 முதல் 12, 2025 வரை நடத்தப்படுகிறது.



வேளாண்மைத் தொழில் முனைவோருக்கு புதிய தொழில் நோக்கங்களை உருவாக்க உதவும் இந்த நிகழ்வில், நேற்று முன்தினம் (10.2.25) தாவரவியல் மூலக்கூறு உயிர் தொழில் நுட்ப மைய இயக்குநர் முனைவர் ந.செந்தில், COXBIT திட்ட இயக்குநர், முனைவர் எஸ்.மோகன்குமார் மற்றும் இணை பேராசிரியர் & தலைவர் முனைவர் இ.கோகிலாதேவி ஆகியோர் தலைமை வகித்தனர். SRS கல்லூரி உட்பட பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 130 மாணவர்கள் இதில் உற்சாகமாக பங்கேற்றனர்.

### முக்கிய அம்சங்கள்

இந்த நிகழ்வில் ஸ்டார்ட்அப்- தமிழ்நாடு-ன் திட்ட உதவியாளர் ராஜசேகர், இந்தியாவின் வளர்ந்து வரும் அக்ரி-டெக் ஸ்டார்ட்-அப் துறையின் வளர்ச்சி, அரசின் உதவித் திட்டங்கள், தொழில்முனைவோருக்கான இன்க்யூபேன் மையங்களின் பயன்கள் குறித்து விளக்கினார். M/s புஸ்மர் நிறுவனத்தின் செயல் அதிகாரி கிசோர் ‘இளநீர்- வாழ்வின் அமுதம்’ தலைப்பு

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பற்றி பேசும் போது இயற்கை சார்ந்த உணவு பதப்படுத்துதல், ரசாயன கலப்பின்றி நீண்ட காலத்திற்குத் பராமரிக்கும் தொழில்நுட்பம் மற்றும் வியாபார யுக்திகள் இல்லாவிட்டாலும் வெற்றி பெறலாம் என்பதைக் குறிப்பிட்டார். அம்மாச்சியின் மசாலா நிறுவனத் தோற்றுநர் ஜமுனா பிரியா, குறைந்த குளுக்கோஸ் அளவுள்ள ஆரோக்கிய உணவுகள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிலில் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொண்டார். ரமேஷ், (ஆதித்ய பிர்லா லிமிடெட்), மற்றும் சண்முகசிவா (குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம்), ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களில் உள்ள வேலை வாய்ப்புகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வு வேளாண்மைத் தொழில்முனைவோருக்கு ஊக்கமளிக்கும் ஒரு முக்கிய மேடைஆக மாறியுள்ளது. அரசு ஆதரவுகளுடன், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமையான யுக்திகள் மூலம்இந்திய வேளாண்மையில் புதுமையான மாற்றங்களை கொண்டு வர இளைஞர்களுக்கு மிகுந்த வாய்ப்புகளை வழங்குகிறது.

# மீன் மற்றும் மீன் சார்ந்த மதிப்பு கூட்டுதல் பயிற்சி

திருவண்ணாமலை, பிப்.11

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நெல்லி கிராமத்தில் செயல்பட்டு வரும் வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் தேசிய மீன் வாரியம் இணைந்து மீன் மற்றும் மீன் சார்ந்த மதிப்பு கூட்டுதல் பயிற்சி வருகின்ற 18.2.25 முதல் 22.2.25 வரை ஐந்து நாட்கள் நடத்த உள்ளது.

பயிற்சியில் ஆர்வமுள்ள விவசாயிகள் / பண்ணை மகளிர் கீழ்கண்ட இணைப்பில் பதிவு செய்து பங்கு பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இணைப்பு முகவரி : https://forms.gle/QWhhdfvCASvh54JF8.

பயிற்சி முதலில் பதிவு செய்யும் 25 விவசாயிகளுக்கு மட்டுமே.

மேலும் தகவல்களுக்கு த.மார்க்ரெட், 98424 86156 என்ற எண்ணில் அணுகலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உயிர் உர உற்பத்தி மையம் மற்றும் உயிர் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு கள்ளிக்குடி வட்டார விவசாயிகள் கண்டுணர்வு பயணம்



மதுரை, பிப்.11

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் 'உயிர் உர உற்பத்தி மையம் மற்றும் உயிர் கட்டுப்பாட்டு ஆய்வகம்' குறித்த உள்மாவட்ட விவசாயிகள் கண்டுணர்வு பயணமானது கள்ளிக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜெ.சந்திரகலா தலைமையில் மதுரை கப்பலூர் சிப்காட் பகுதியில் அமைந்துள்ள திரவ உயிர் உர உற்பத்தி மையத்திற்கு கள்ளிக்குடி வட்டாரத்தை சார்ந்த 50 விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

திரவ உயிர் உர உற்பத்தி மைய வேளாண்மை அலுவலர் ஞானவேல், விவசாயிகளிடம் உயிர் உரங்கள் தயாரிக்கும் முறைகள், பயன்பாடு, உயிர் உரங்களின் வேலைத்தன்மை குறித்தும், அதில் அடங்கியுள்ள சத்துக்கள் பற்றியும், உயிர் உரங்களை பயன்படுத்தும் முறைகள் மற்றும் அளவுகள் பற்றியும் விவசாயிகளிடம் தெளிவாக விளக்கினார். மேலும் விவசாயிகளுக்கு உயிர் உர உற்பத்தி ஆய்வகத்தில் திரவ உயிர் உரங்களை தயாரிப்பதற்கான நுண்ணுயிர்கள் மற்றும் பாக்டிரியாக்கள், செய்முறை விளக்கங்கள் பற்றி செயல் விளக்கம் செய்து காண்ப்பிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திராதேவி நன்றி தெரிவித்தார்.

இப்பயணத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்களான லாவண்யா மற்றும் யுவராஜ் குமரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 11.02.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 26 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 24 | 28 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 35 | 40 | 57A | உருளை(ஊட்டி) | 24 | 48 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 26 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 40 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 45 | 50 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 44 |
| 6 | புடலை | 38 | 42 | 62 | நூல்கோல் | 20 | 26 |
| 7 | பீர்க்கன் | 40 | 46 | 63 | டர்னிப் | 25 | 30 |
| 8 | சுரைக்காய் | 15 | 18 | 64 | மு.கோஸ் | 15 | 18 |
| 9 | பாகற்காய் | 40 | 44 | 65 | மு.கோஸ்(கலர்) | 20 | 26 |
| 10 | கொத்தவரை | 28 | 32 | 66 | காளிபிளவர் | 32 | 36 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 60 | 68 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 170 | 180 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 38 | 42 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 80 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 52 | 58 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 55 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 24 | 28 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 44 | | | | |
| 19 | முருங்கை | 90 | 100 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 80 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 45 | 50 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 24 | 28 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 14 | 18 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 26 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 20 | 24 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 25 | 30 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 20 | 24 | | | | |
| 55A | துவரை | 45 | 50 | | | | |

# விவசாயிகள் பிரத்தியோக அடையாள எண் பெற அழைப்பு

சேலம், பிப்.11

மத்திய மற்றும் மாநில அரசு வழிகாட்டுதலின்படி சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தனி அடையாள எண் (ஆதார் எண் போன்று) வழங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த அடையாள எண் இனி வருங்காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசின் நலத்திட்டங்கள் பெற அவசியம்.

எனவே தலைவாசல் வட்டார விவசாயிகள் தங்கள் பகுதியில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு தங்கள் நிலத்தின் தற்போது பதிவிறக்கம் செய்யப்பட்டு கணினி சிட்டா, ஆதார்




அட்டை நகல், ஆதார் எண் உடன் இணைத்த மொபைல் ஆகியவற்றை கொண்டு வந்து தங்களுக்கு தனித்துவமான அடையாள எண்ணை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை யாளர்களையும் அல்லது தோட்டக்கலை அலுவலர்களையோ அல்லது தலைவாசல் வட்டார வேளாண்மை விரிவாக்கம் மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

விவசாயிகளும் தவறாமல் தங்களுடைய கிராமங்களில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு தங்களுக்குரிய அடையாள எண்ணை பெற்றுக் கொள்ளும்படி வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE
Rithvik Pipe

# மூடுபயிராக பயிரிடும் பயறு வகைப் பயிர்களின் நன்மைகள்

**மூடுபயிர்**

● மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், மண் அரிப்பைக் குறைக்கவும், களைகள் மற்றும் பிற பூச்சிகளை குறைக்கவும் இரண்டு சாகுபடி பருவங்களுக்கு இடையில் பயிரிடப்படும் பயிர்கள் மூடு பயிர்கள் ஆகும்.

● இவை ஒளி, இடம், நீர் மற்றும் ஊட்டச்சத்துக்காக களையுடன் போட்டியிட்டு களைகளின் வளர்ச்சியை தடுக்குகின்றன.

● ஒரு பயிர்ப்பருவம் முடிவுற்ற பிறகு இந்த மூடு பயிரானது மண்ணின் மேற்பரப்பை மூடிக் கொள்வதால் களை முளைப்பு தடை செய்யப்படுகிறது.




● மேலும் களைக்கொல்லி எதிர்ப்பு கொண்ட களைச் செடிகளை குறைப்பதன் மூலம் மூடுபயிர்கள் ஒருங்கிணைந்த களை மேலாண்மையில் முக்கிய பங்காற்றுகின்றன.

| மூடு பயிர் | தழைச்சத்து நிலைநிறுத்தல் (கிலோ/எக்டர்/பயிர்) |
|---|---|
| தட்டைப்பயறு | 30-40 |
| சோயா பீன்ஸ் | 50-150 |
| கொண்டைக்கடலை | 24-84 |
| பச்சை பயறு | 71-112 |
| துவரை | 150-280 |

பயறுவகை மூடுபயிரானது மேல்கண்டவாறு மண்ணில் தழைச்சத்தை நிலைநிறுத்தி வளத்தை அதிகரிக்கிறது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

# விவசாயிகளுக்கு அடையாள எண் பதிவு செய்ய அறிவுறுத்தல்

விருதுநகர், பிப்.11

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை – உழவர் நலத்துறையின் முக்கிய அறிவிப்பு என்னவெனில், அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள எண் ஏற்படுத்துவதற்கான பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த அடையாள எண் ஆதார் எண் போன்றது, இதை வைத்து இனி வரும் காலங்களில் விவசாயம் சார்ந்த அனைத்து பயன்களுக்கும் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**பின்வரும் முக்கிய துறைகளான**

1. வேளாண்மை துறை

2. தோட்டக்கலைத் துறை



3. வேளாண்மை பொறியியல் துறை

4. கூட்டுறவு கடன் சங்கங்கள்

5. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை

6. சர்க்கரைத்துறை

7. கூட்டுறவுத்துறை

8. கால்நடை பராமரிப்பு துறை

9. வங்கிகள்

10. நீர்வளத்துறை மற்றும் 24 துறைகளில் வழங்கப்படும் மானியம், நலத்திட்டங்கள், வங்கி கடன் போன்றவற்றிற்கு இந்த அடையாள எண் இன்றியமையாதது ஆகும்.






9.2.25 முதல் இந்த முகாம் நரிக்குடி வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்து/ கிராம நிர்வாக அலுவலகங்களில் நடைபெறுகிறது.

அதனால் விவசாயிகள் அனைவரும் பதிவு செய்து பயன் பெறுமாறு நரிக்குடி, வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

**தேவையான ஆவணங்கள்**

1. ஆதார் எண்

2. பட்டா சிட்டா

3. கைப்பேசி (ஆதார் OTP வருகின்ற கைபேசி).

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சர்வதேச சந்தைகளில் நல்ல விலை கிடைப்பதற்காக பூவிசார் குறியீடு தேவை? ஏன்? எப்படி?


भारत सरकार
GOVERNMENT OF INDIA
भौगोलिक उपदर्शन रजिस्ट्री
Geographical Indication Registry

இன்றைய தினத்தில் உலக வணிக அமைப்பின் ஒரு அங்கமாக நமது நாடு இந்தியா இடம் பெற்றுள்ள காரணத்தால் நம்முடைய வேளாண் விளைபொருட்கள் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட கைவினை பொருட்கள், பாரம்பரிய உணவு பொருட்களுக்கு சர்வதேச சந்தையில் காட்சிபடுத்து வதால் நல்ல விலைக்கு விற்பனை செய்வதுடன் மட்டு மல்லாது அதனுடைய உற்பத்தியும் அதிகரிப்பதால் தனிப்பட்ட விவசாயிகளும் பயன்பெறுவதுடன் நாட்டின் அன்னிய செலாவணி மூலமாக நாட்டின் பொருளாதாரம் மேம்படுத்த உதவுகிறது இந்த பூவிசார் குறியீடு.




**பூவிசார் குறியீடு என்றால் என்ன?**

பூவிசார் குறியீடு என்பது (GEROPHICAL INDEX) GI.TAG) குறிப்பிட்ட புவியியல் இருப்பிடம் அல்லது பகுதி நகரம் / நாடு போன்றவற்றுடன் தொடர்புடைய தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு வழங்கப்படும் அடையாளமே, இந்த புவிசார் குறியீடு எனவும் GI.TAG) அழைக்கப்படுகிறது.

**எதனடைப்பில் இந்த புவிசார் குறியீடு, யாரால் எப்போது இருந்து வழங்கப்படுகிறது தெரியுமா?**

உலக வணிக அமைப்பில் (WORLD TRADING ORGANISA-TION) நம்முடைய நாடு ஒரு உறுப்பு நாடாக இணைந்து சர்வதேச அளவில் வணிகத்தை மேற்கொள்ள வசதியாக, இந்தியாவில் புவிசார் குறியீடுகள் சட்டம் (புதிவு மற்றும்

பாதுகாப்புச் சட்டம்) 1999 ஆண்டு நிறைவேற்றப்பட்டு செப்டம்பர் 2003யிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த சட்டத்தின் வாயிலாக நம்முடைய நாட்டின் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களுக்கு பதிவு மற்றும் பாதுகாப்பு தருகிறது. நம்முடைய நாட்டில் இதுவரை 333 பொருட்களுக்கு புவிசார் குறியீடு அடையாளம் வழங்கப்பட்டுள்ளது.

**புவிசார் குறியீடு பெற என்ன என்ன தகுதி இருக்க வேண்டும்.?**

புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கும் பொருட்களுக்கு உண்மையான தனித்துவம், தரம், பாரம்பரியம், வரலாற்று சான்றுகள் இருக்க வேண்டும். அவை விவசாய பொருட் களாகவோ, கைவினைபொருட்களாகவோ, இயற்கை சார்ந்த பொருட்களாகவோ இருக்க வேண்டும்.




**புவிசார் குறியீடு பெற தமிழக அரசு வேளாண்மை துறை மூலமாக விண்ணப்பித்த பொருட்கள் எவை? தெரியுமா?**

தமிழக வேளாண் உழவர் நலத்துறை மூலமாக 34 வேளாண் விளைப்பொருட்களுக்கு விண்ணப்பிக்கப் பட்டுள்ளன.

அவற்றில் முக்கியமான சாத்தூர் சம்பா மிளகாய், சாத்தூர் வெள்ளரி, விருதுநகர் அதலைக்காய், மதுரை செங்கரும்பு, இராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி, சிவகங்கை கருப்பு கவுனி அரிசி உள்ளிட்ட பொருட்களுக்கு புவிசார் குறியீடு வேண்டி விண்ணப்பிக்கபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் விண்ணப்பிக்கப்பட்ட 145 பொருட்களுக்கு கடந்த ஆண்டு டிசம்பர் வரை 59 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைக்க பெற்றுள்ளது.

**புவிசார் குறியீட்டால் என்ன நன்மைகள்**

1) சர்வதேச அளவில் சந்தைபடுத்துதல்

2) போலிகளை கண்டறிருந்து சட்ட படி நடவடிக்கை மேற்கொள்ளல்.

3) உற்பத்தியும் விற்பனையும் அதிகரிப்பதால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

4) அன்னிய செலாவணி வரவால் நாட்டின் பொருளாதார மேம்படுத்துதல்.

5) பாரம்பரியங்கள் அழிவிலிருந்து பாதுகாக்க உதவுதல்.

என்ன? உங்களுடைய பகுதியில் ஏதேனும் பாரம்பரிய தரமான பொருட்கள் இருந்தால் தெரிவித்து புவிசார் குறியீடு பெற உதவுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# உழவர் செயலியின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



செங்கல்பட்டு, பிப்.11

எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி இறுதியாண்டு கிராமப்புற வேளாண் பணி அனுபவத் (RAWE) திட்டத்தின் கீழ் உள்ள மேக்ஸ் வெபர் குழு மாணவிகள் உழவர் செயலியின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாட்டை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சி தன்னார்வ இணைப்பு (NGO Attachment) செயல்பாடுகளின் ஒரு பகுதியாக நடைபெற்றது.

மாணவர்கள் உழவர் செயலி விவசாயிகளுக்கு எவ்வாறு உதவிகரமாக இருக்கும், பசுமைச்சங்கம் தொடர்புகள், சாகுபடி அறிவுறுத்தல்கள், சந்தை விலை விவரங்கள் மற்றும் மானிய விவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வழிமுறைகள் குறித்து விவரமாக விளக்கம் வழங்கினர்.

விவசாயிகள் கைபேசியில் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் பயன்பாட்டை நேரில் உணர்ந்து பார்த்தனர். மாணவர்கள் விவசாயிகளின் சந்தேகங்களை தெளிவுபடுத்தி செயலியை தொடர்ந்து பயன்படுத்த ஊக்கமளித்தனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் உழவர் செயலியைப் பயன்படுத்தும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், அவர்களின் சாகுபடி முறைகள் மேம்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சூளகிரி வட்டாரத்தில் வேளாண் அடுக்கு திட்ட முகாம்

கிருஷ்ணகிரி, பிப்.11

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண் உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, சூளகிரி வட்டாரத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் வேளாண் அடுக்கு திட்டத்தின் கீழ் விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கும் முகாம் 9ம் தேதி முதல் தொடங்கி 18ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இத்திட்டத்தில் விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட உள்ளது. இனி வரும் காலங்களில் அரசுகளின் அனைத்து திட்டங்களின் பயன்களும் இதன் அடிப்படை யிலேயே வழங்கப்படும். சூளகிரி வட்டாரத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் ஊராட்சி மன்ற அலுவலகங்களில் நடைபெறும் முகாமில் தங்களது நில உடைமை ஆவணங்களான பட்டா, ஆதார் அட்டை, ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண் மற்றும் பிற ஆவணங்களை கொண்டு வந்து பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு அருகாமையில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மண்வளம் காப்பதில் ஊடுபயிர் மூடுபயிர் முக்கியத்துவம் மற்றும் பயன்கள்!

மண்ணின் வளம் என்பது மண்ணின் அங்கக கரிம அளவு, நுண்ணுயிர்களின் எண்ணிக்கை நீர்ப் பிடிப்பு தன்மை மண்ணில் எஞ்சியுள்ள தாவர ஊட்டச்சத்துக்களின் அளவு ஆகியவற்றை பொருத்து அறியப்படும் ஓர் அளவீடு மண்ணின் வளத்தினைக் காப்பதற்கு மூடுபயிர் ஊடுபயிர் மற்றும் நிலப்போர்வையும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

ஏனெனில் மண்ணினை சூரிய ஒளிபடும்படி திறந்த வெளியில் விடும்பொழுது அங்கசு கரிமம் குறைந்து மண்ணின் வளம் பாதிக்கப்படுகிறது. மேலும் இப்பயிர்களால் களைகளைக் குறைக்கவும், நீர் இழப்பு, பூச்சிகள் மற்றும் மண்ணரிப்பைக் குறைக்கவும் பயன்படுகிறது.

**மூடு பயிர்**

இது எந்த வகை பயிராக வேண்டுமானாலும் இருக்கலாம். இப்பயிர் பருவகாலப் பயிர் அறுவடைக்குப் பின் மண்ணின் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி விதைக்கப்பட்டு குறுகிய காலத்தில் அப்பயிர்களின் வெகுவான வளர்ச்சியைப் பயன்படுத்தி மண்ணில் முழுவதுமாக போர்வைபோல் விரிந்து சூரிய வெளிச்சத்தை மண்ணில் நேரடியாகப்படுவதை தவிர்ப்பதால் மூடுபயிர் என அழைக்கப்படுகிறது. இப்பயிர்கள் பயறு வகைப் பயிர்களாகவோ அல்லது வேறு வகையாகவும் இருக்கலாம். தட்டைப்பயறு, நரிப்பயறு, கொள்ளு, பாசிப்பயறு போன்றவை மூடுபயிர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.




**ஊடுபயிர்**

பருவகால பயிருக்குப் பின் அகன்ற இடைவெளியில் பயிர்கள் பயிரிட வேண்டிய காலத்தில்/ அப்பயிரின் முன்வளர்ச்சி காலக் கட்டத்தில் இரு வரிசைகளுக்கு இடையே உள்ள இடைவெளியை மறைக்க குறுகிய கால பயிர்களான உளுந்து பாசிப்பயறு. தட்டைப்பயறு போன்றவைகள் பயிரிடப்பட்டு மண்ணின் வளத்தை காப்பது ஊடுபயிரின் நோக்கமாகும்.

ஊடுபயிர்கள் வளர்ப்பதால் கனளகள் கட்டுக்குள் வைக்கப் படுகின்றன. அவை குறுகிய காலப்பயிர்களாக இருப்பதால் பண்ணையின் வருமானத்தை அதிகரிக்கும் காரணியாகவும் அமைகின்றது என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சாகுல் அமீத் தெரிவித்தார்.

Rithvik® Pipe
PIPING FOR LIFE

BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS

இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஒரே நிறுவனம்

- ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
- ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG-க்கு மேல்)
- ஒவ்வொரு ரித்விக பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.

வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779

